இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர் .

**OS NO.132/2015**

**2021**ம் ஆண்டு அக்டோபர் திங்கள் **28** ஆம் நாள் வியாழக்கிழமை **5** ஆம் பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய பி.சா.**4** வாக்குமூலம், ( **1969** ம் ஆண்டின் **54**-வது விதியின் **95** வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. எம். அல்லிராணி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வழக்கறிஞர் திரு. தம்பிதுரை | வயது | : | |
| த.பெ./க.பெ. | : | கிருஷ்ணமூர்த்தி | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | | |

**முதல் விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது அதன் அடிப்படையில் சாட்சி சொல்கிறேன். உயிலில் சான்றொப்பம் செய்தது சம்மந்தமாக சாட்சி சொல்ல அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. உயிலை பார்த்தால் என்னால் யார் எழுதியது என்று சொல்லமுடியும். இந்த உயிலை எழுதியது நான்தான். அந்த உயிலில் அனைத்து பக்கங்களிலும் உயிலில் எழுதிய ராதாகிருஷ்ணனின் கையொப்பம் உள்ளது. அதில் சாட்சிகள் பாலசந்திரன் 1வது சாட்சியாகவும், பத்பநாபன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள். உயிலில் நான்கு பக்கங்களிலும் என்னுடைய கையொப்பமும், என்னுடைய நோட்டரிசிலும் இருக்கிறது. எனக்கு ராதாகிருஷ்ணனை கோவிந்தராஜ் என்ற கல்லூரி பேராசிரியர் அறிமுகப்படுத்தினார் அவர் சொன்னதன் பேரில் என் வேலை அனுசரித்து ஒருவாரம் கழித்து ராதாகிருஷ்ணனை அவரது வீட்டிற்கு சென்று சந்தித்தேன், அவர் விபரம் சொன்னார், பின்னர் 02.05.2010 அன்று உயிலை தயார் செய்துக்கொண்டு ராதாகிருஷ்ணன் வீட்டிற்கு சென்று அவருக்கு படித்து காண்பித்தேன். அவர் உயில் சரியாக இருப்பதாக ஒப்புக்கொண்டு எல்லாபக்கங்களிலும் கையெழுத்து செய்தார். சாட்சிகள் பாலசந்திரனும், பத்பநாபனும் அதில் சாட்சி கையொப்பமிட்டனர். நானும், அதன் பிறகு எல்லாபக்கங்களிலும் கையொப்பமிட்டு சில் வைத்தேன். ராதாகிருஷ்ணன் கையெழுத்து போட்டதை சாட்சிகள் பார்த்தனர், சாட்சிகள் கையொப்பம் போட்டதை ராதாகிருஷ்ணன் பார்த்தார், ராதாகிருஷ்ணனும், சாட்சிகளும் கையொப்பம் போட்டதை நானும் அங்கிருந்து பார்த்தேன். 4 வது பக்கத்தில் சாட்சிகளும், ராதாகிருஷ்ணனும் என்முன்னிலையில் கையெழுத்து போட்டதாகதான் எழுதி நானும், கையெழுத்து போட்டிருக்கிறேன். 02.05.2010 அன்று 2 சாட்சிகள் என்றும், கையெழுத்து போட்டிருக்கிறேன். 02.05.2010 அன்று மாலை 5, 5 1/4 கெல்லாம் அங்கு

போய்விட்டேன். படித்து காண்பித்து கையெழுத்து போட மாலை 6 ¾ மணிவரை ஆனது. உயில் படித்து காண்பித்து கையெழுத்து போடும்போது ராதாகிருஷ்ணன் நல்லமனநிலையில் சுயநினைவுடன்தான் இருந்தார். அவர் எழுந்து நடக்கக்கூடிய நிலையில் தான் இருந்தார், அவர்தான் எழுந்து வந்து கதவை திறந்தவர். அந்த உயில் ஏற்கனவே பி.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உயிலில் ஏ செடியூல் பி செடியூல் இரண்டு அட்டவணை உள்ளது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது**.**

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- அ.மலர்விழி )
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.